**சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம் - 2019**

சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 செப்தெம்பர் 05 ஆம் திகதிய 5792–எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2பீ(3) ஆம் உறுப்புரை பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்றிட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்றிட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு செயற்றிட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வன வளப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் என்பன செயற்றிட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. சமுதாயத்தின் பாதுகாப்பு நோக்கத்திற்காகவும் நன்மைகளிற்காகவும் இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட இடங்களிலுள்ள சூழல் தொகுதி முகாமைத்துவ நிலையை முன்னேற்றுவதே செயற்றிட்டத்தின் குறிக்கோளாகும். ஆரம்ப நில அளவை திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், இயற்கை வளங்களின் நிலைபேறான பயன்பாடு மற்றும் மனிதன் – யானை சகவாழ்வு மற்றும் பாதுகாக்கப்பட்ட பிரதேச முகாமைத்துவம் தொடர்பான நிறுவகரீதியான இயலளவுகளை முன்னேற்றுதல் போன்ற பெயர்களிலான மூன்று பிரதான கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 6,504.75 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 45 மில்லியனானதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 திசெம்பர் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2021 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்றிட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக்

கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 5,028,177 ஆக காணப்பட்ட அதே நேரம் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டியவையாக அதற்கு நேரொத்த பெறுமதி ரூபா 5,671,846 குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக ரூபா 643,668 வேறுபாட்டை இணக்கம் செய்வதற்கும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகையை சீர்செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வகைப்படுத்தல் தவறு | நீர் மற்றும் மின்சாரத்திற்கான உரிய ஏற்பாட்டுத் தொகைகளுடன் மரக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறப்பட்ட சிட்டைகளின் பிரகாரம் ரூபா 5,028,177 தொகை பதிவு செய்யப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இதனை இணக்கம் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கிற்கு சரியாக எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 482.29 மில்லியன் நடைமுறை வேலை பெறுமதி ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் | வகைப்படுத்தல் தவறு | எதிர்கால நிதிக்கூற்றுக்களில் திருத்தம் மேற்கொள்ளப்படும். | கணக்கிற்கு சரியாக எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிலையான சொத்துக்களாக தவறுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | | |
| (இ) | ரூபா 68.90 மில்லியன் மற்றும் ரூபா 26.36 மில்லியன் தொகையான முறையே வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் மற்றும் நிறுத்தி வைத்தல் பணம் என்பவற்றின் மீதிகள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | வகைப்படுத்தல் தவறு | எதிர்கால நிதிக்கூற்றுக்களில் திருத்தம் மேற்கொள்ளப்படும். | கணக்கிற்கு சரியாக எடுக்கப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டக் காலப்பகுதியின் 70 சதவீதம் கடந்திருந்த போதிலும் நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் முறையே 24 சதவீதம் மற்றும் 31 சதவீதமாக காணப்பட்டன. | உள்ளகக் கட்டுப்பாடு காணப்படாமை. | செயற்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட தன்மை காரணமாக செயற்திட்ட அமுல்ப்படுத்தலின் ஆரம்ப ஆண்டுகளின் போது அதிக பிரச்சனைகளை இரண்டு அமுல்ப்படுத்தல் முகவர்களும் அனுபவித்திருந்தனர். எனினும் இத் தடைகள் தெளிவுபடுத்தப்பட்டு செயற்திட்டம் துரித விகிதத்தில் முன்னேறுகின்றது. | செயற்பாட்டுத் திட்டம் பின்பற்றப்பட வேண்டும். |

**3.2 வழமைக்கு மாறான செயற்பாடுகள்/ செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்**

| | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டக் காலப்பகுதியின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய குறித்துரைக்கப்பட்ட | உள்ளகக் கட்டுப்பாடு காணப்படாமை. | உலக வங்கியின் அங்கீகாரத்துடன் அமுல்ப்படுத்தல் முகவர்களின் மாறறமடையும் | திட்டம் நிலையானதாக இருக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெறுகை நடவடிக்கைகளை செயற்திட்டம் இனங்கண்டிருக்கவில்லை. ஆகையால் செயற்திட்ட அலுவலகத்தால் பெறுகைத்திட்டம் 51 தடவைகள் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. மேலும் 2019 திசெம்பர் 31 வரை மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 52 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 5,029,522,110 இற்குச் சமமான ஐ.அ.டொலர் 27,186,606 பெறுமதியான செயற்திட்டத்தின் பெறுகை நடவடிக்கைகள் முறையாக பெறுகைத் திட்டத்தை தயாரிப்பதிலுள்ள செயற்திறனின்மை காரணமாக இரத்துச் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | தேவைப்பாடுகளின் பிரகாரம் பெறுகைத் திட்டத்திற்கான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் முழுச் செயற்திட்டக் காலப்பகுதிக்கான திட்டம் தற்போது உருவாக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்காக மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 509,700 பெறுமதியான மூன்று கணனிகள் உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாமல் களஞ்சிய வளாகங்களில் காணப்பட்டன. | பயனற்ற செலவினங்கள் | "Android Mobile Device" ஒன்றை நிறுவுவதற்காக மூன்று கணனிகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் உள்ளபடியான கள கண்காணிப்பு நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட வேண்டியிருந்தது. எனினும் குறித்துரைக்கப்பட்ட Mobile Device உள்ளூர் சந்தையில் காணப்படாததுடன் இறக்குமதி செய்யப்பட வேண்டியிருந்தது. பெறுகையானது செயன்முறையிலுள்ளதுடன் கணனிகள் எதிர்காலத்தில் வினைத்திறனாக பயன்படுத்தப்படும். | உரிய காலத்தில் கொள்வனவு செய்யப்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| செயற்திட்ட அலுவலகத்தால் 03 மாத காலப்பகுதிக்கு ரூபா 900,000 கொடுப்பனவு அடிப்படையில் மதியுரை பெறுகை வழிகாட்டியின் 2.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரமின்றி தொடர்பாடல் மதியுரையாளர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தார். | வழிகாட்டலை மீறுதல். | ஆட்சேர்ப்பானது உலக வங்கி மிஷனின் வேண்டுகோளை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் செயலாளரால் தலைமைதாங்கப்பட்ட முடிவுசெய்தல் கூட்டமொன்றில் இணங்கப்பட்ட நடவடிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | செயலாளரின் அங்கீகாரத்தின் பின்னர் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| 2020 பெப்ரவரி 08 வரையான காலப்பகுதிக்கு செயற்திட்ட அலுவலகக் கட்டிடத்தை வாடகைக்கு விடுவதற்காக அரச மரக் கூட்டுத்தாபனம் மற்றும் செயற்திட்ட அலுவலகத்துடன் குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட அலுவலகம் மிகுதிக் காலப்பகுதிக்கு புதிய குத்தகை உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடாமல் 2020 ஆகஸ்ட் 26 வரை தொடர்ச்சியாக அதே கட்டிடத்தில் செயற்பட்டிருந்தது. | கண்காணிப்பு காணப்படாமை. | 2020 பெப்ரவரி 09 தொடக்கம் 2021 யூன் 30 வரை அரச மரக் கூட்டுத்தாபனத்துடன் புதிய ஒப்பந்த உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | உரிய காலத்தில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். |